1989 மே 5] [திரு. செங்கை சிவம்]

நிறுவனத்தின் மூலமாக பெறக்கூடிய ஒரு குறிப்பையும் வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களின் மூலம் அதன் உதவியுடன் இதை நிரந்தரமாக கட்டுவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா? ஆகவே, நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்படுகிற அத்தகைய நிலைகளை தடுக்க முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூண்டி நிலையம் தனது ஆராய்ச்சியை முடிப்பதற்கு 12 முதல் 22 மாத காலம் அவகாசம் கேட்டிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் விரைவில் அந்தப் பணியை முடித்து அறிக்கையை சமர்ப்பிக்க அறிவுறுத்தியுள்ளது. அறிக்கை பெறப்பட்ட உடன் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களைப் பரிசிலனை செய்து நிச்சயமாக நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத்